**அனுப்புநர்**

திருமதி.ந. லதா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை மற்றும் தனியார்)

**ந.க.எண். 015885/பி1/2024** **நாள். 14.05.2025**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – மார்ச்/ஏப்ரல்–2025 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் – அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியல் (TML) அனைத்துப் பள்ளிகளும் ஆன்–லைன் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்வது தொடர்பான அறிவுரைகள்–சார்பு.

**பார்வை :** அரசாணை (நிலை) எண். 14, பள்ளிக்கல்வித் (ஜிஇ.1)த் துறை நாள். 29.01.2018.

**********

மார்ச்/ஏப்ரல்–2025 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிய மாணவர்களின் தேர்வு முடிவுகள் வருகிற **16.05.2025 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 09.00 மணிக்கு** வெளியிடப்படவுள்ளது.

முதன்மைக் கல்வி அலுவலர்கள் / மாவட்டக் கல்வி அலுவலர்கள், தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து மேல்நிலை/உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் **16.05.2025 அன்று** www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று, தங்கள் பள்ளிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள User–ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி, பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கான அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை (TML) **காலை 10.00 மணி முதல்** பதிவிறக்கம் செய்து கொள்ள தேவையான அனைத்து முன்னேற்பாடுகளையும் தயார் நிலையில் வைத்திருக்க பள்ளித் தலைமையாசிரியர்களை அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் மாவட்டத்திற்கான அனைத்துப் பள்ளிகளின் தேர்வு முடிவுகள் மற்றும் பகுப்பாய்வு அறிக்கையினை **16.05.2025 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 09.30 மணி முதல்** தங்களது User–ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி மேற்காண் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துக்கொள்ளுமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**ஒம்/–**
**இயக்குநர்**

**நகல்**
அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.